**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை

அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 பெப்ரவரி தொடக்கம் 2021 நவம்பர் வரையான காலப்பகுதியில் வங்கி நடைமுறைக் கணக்கு 02 இற்கான பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 3,187,360 ஆனது மீளாய்வாண்டிற்கான கற்கை நெறிக் கட்டணம் வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது வைப்புக்ககளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் மிகை அந்தளவினால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | ரூபா 3,103,752 ஆன கற்கை நெறிக் கட்டணப் பெறுவனவுகள் இனங்காணப்பட்டு 2022 யூலை மற்றும் அதற்கு முந்திய மாதங்களில் கணக்கிடப்பட்டிருந்த தாகவும் மற்றும் எதிர்காலத்தில் வைப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு உள்ளக முறைமையொன்று செயற்படுத்தப்படும். | கணக்குக்குரிய காலப்பகுதிக்கான கற்கை நெறிக் கட்டண வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கற்கை நெறிகளை விட்டுச் சென்ற மாணவர்களின் கற்கை நெறிக் கட்டணம் சீராக்கப்படுவதற்கு உறுதியான முறைமையொன்று இனங்காணப்படாததுடன் 2021 திசெம்பர் 31 வரையில் கற்கை நெறிகளை விட்டுச் சென்ற மாணவர்களின் நிலுவை கற்கை நெறிக் கட்டணம் ரூபா 8,117,626 நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தது | 2017 ஆம் வருடம் தொடக்கம் 2020 ஆம் வருடம் வரை கற்கை நெறிகளை விட்டுச் சென்ற மாணவர்களின் பெற வேண்டிய ரூபா 8,117,626 கணக்குகளில் நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்படாத கற்கை நெறிக் கட்டண வருமானங்களை முறையாக பதிவளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மாணவர்களுக்கு மானியம் வழங்குவதற்காக தனிப்பட்ட தரப்பினரால் செய்யப்பட்ட ரூபா 453,417 ஆன மாணியங்களான கடந்த 05 வருடங்களுக்கு முன்னைய | நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட இம் மானியம் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டு திருத்தப்படுவதற்கு | மானியம் மற்றும் நன்கொடைகள் மீண்டும் செலுத்தப்படுகின்ற தேவையொன்று இல்லாமையால் |

| | | |
|---|---|---|
| காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 07 நிதியங்களின் கணக்கு மீதிகள் உரிமையின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது | நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமையின் கீழ் இனங்காணப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் வருடம் தொடக்கம் 2020 ஆம் வருடம் வரை அறவிட வேண்டியதாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 16,495,679 ஆன கற்கை நெறிக் கட்டணத்தில் ரூபா 8,378,054 ஆன கற்கை நெறிக் கட்டணம் 2021 திசெம்பர் 31 வரையில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைககள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 8,378,054 ஆன தொகை முதுமாணி (MSW) பட்டங்களுக்காகப் (2018/20) பெற வேண்டிய தொகையாகும். அத்தொகை 2022 ஆம் வருடத்திலும் மற்றும் எதிர்வரும் வருடத்திலும் பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிலுவை கற்கை நெறிக் கட்டணம் விரையில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396(ஈ) | காலாவதியாகிய காசோலைகள் இரத்துச் செய்யப்படுவதற்கான தொகையாக கணக்கிடப்பட வேண்டியுள்ள போதிலும் நடைமுறைக் கணக்குகள் 02 இற்கான மொத்தப் பெறுமதி ரூபா 154,702 ஆன 38 காசோலைகள் செல்லுபடியாகும். காலமான 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் | 2021 ஆம் வருடத்தில் காலாவதியாகிய அனைத்து காசோலைகளும் 2022 செப்டெம்பர் மாதத்தில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் 06 மாதங்கள் கடந்த காசோலைகளை வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை | நிதிப்பிரமாணம் ஏற்பாடுகளின் பிரகாரம் காலாவதியாகிய காசோலைகள் கொடுப்பனவிற்கான தொகையாக கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்படும். | வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1992 இன் 41 ஆம் இலக்க தேசிய அபிவிருத்தி நிறுவக சட்டத்தீன் 4(உ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உடனடிச் செலவுகளுக்குத் தேவையற்ற பணம் வங்கி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், 2016 ஆம் வருடம் தொடக்கம் மீளாய்வாண்டு வரை ஒவ்வொரு வருடத்திலும் திசெம்பர் 31 ஆம் திகதியில் இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளில் தேக்கி வைக்கபட்டிருந்த முறையே ரூபா 15,976,657, ரூபா 14,887,523 ரூபா 26,079,372, ரூபா 35,291,816, ரூபா 45,466,608 மற்றும் ரூபா 46,263,732 ஆனது மேலதிக பணப் பத்திரங்களில் அல்லது வேறு பொருத்தமான முதலீட்டு வழிகளில் முதலீடு செய்து நிறுவகத்தின் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2021 திசெம்பர் 30 ஆம் திகதி ரூபா 25 மில்லியன் நிலையான வைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டதாகவும், 2022 ஆகஸ்ட் மாதத்தில் பயன்படுத்தப்படாத தொகை (idle cash) கணக்கிடப்பட்டு நிலையான வைப்பு ஆரம்பிப்பதற்கு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும். | தேசிய அபிவிருத்தி நிறுவக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14,190,332 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 13,141,022 ஆகும். அதன் பிரகாம் நிதி விளைவுகளில் ரூபா 1,049,310 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு அரச மானியங்கள் ரூபா 10,548,228 ஆல் மற்றும் படிக் கொடுப்பனவுகள், நிர்வாக மற்றும் செயற்திட்டச் செலவுகள் ரூபா 9,409,162 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.